பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 85 பிரமோதூத மாசி 08 (20-02-1991) புதன்

## கூட்டுறவு லொறிகள் சென்றதால் வர்த்தகர்கள் கொள்ளைலாபம் அம்பலம்

குடாநாட்டின் பல. நோ. கூ. சங்கங்கள் கொழும்பில் பொருள்களைக் கொள்வனவு செய்து வந்ததை யடுத்து இங்குள்ள பல வியாபாரிகளினதும் லொறிச் சொந்தக்காரர்களினதும் கொள்ளை இலாப நோக்கம் அம்பலத்துக்கு வந்துள்ளது என வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இங்குள்ள வர்த்தகர்கள் பொருள்களைக் கொழும்பில் கொள்வனவு செய்யும் அதே இடங்களிலேயே கூட்டுறவுச் சங்கங்களும் கொள்வனவு செய்துள்ளன. சீனி, கிலோ ரூ 23, சர்க்கரை ரூ 23, பயறு ரூ 12. 50, புளி ரூ 7, வெ. பூடு ரூ 65, மிளகு ரூ 67, பெ. சீரகம் ரூ 50, வெந்தயம் ரூ 35, என்ற விலையில் கொள்வனவு ...04ஆம் பக்கம் பார்க்க

## ● காணாமல் போனோர் தொடர்பாக

# புலம்பியபடி அன்னையர் கொழும்பில் ஊர்வலம்!

### ஸ்ரீமாவோவும் பங்குபற்றினார்

**தென்னிலங்கையில் அரச படையினரின் நடவடிக்கைகளினால் காணாமற்போனவர்கள் எனக் கருதப்படும் ஐம்பதினாயிரம் பேரின் உறவினர்கள் நேற்று கொழும்பில் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.**

ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை கண்டிக்கும் முகமாக தென்னிலங்கை அன்னையர் முன்னணியின ரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இவ்வூர்வலத்தில் நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்துகொண்டனர். இவர்களில் அநேகமானவர்கள் 'காணாமற் போனவர்களின்' தாய்மார்களும், மனைவிமார்களும் ஆவர்.

ஊர்வலம் மிகவும் உருக்கமானதாக இருந்ததாகவும், இதில் கலந்துகொண்ட பல பெண்கள் அழுது புலம்பிய வாறு சென்றதாகவும் செய் —04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் நடைபெற்ற தாக்குதலினால் கொழும்புத் தினசரிகளின் போக்கில் மாற்றம்

மன்னாரில் புலிகள் நடாத்திய பாரிய தாக்குதல் தென்னிலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா இராணுவம் தனது இழப்பைக்குறைக்கும் அளவில் நடந்து கொள்ள வேண்டும் என 'டெய்லி நியூஸ்' பத்திரிகை நேற்று ஆலோசனை கூறியுள்ளது. இதைத் தவிர பேச்சுவார்த்தைகள் மூலமே இலங்கையின் இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் என நேற்றைய தென்னிலங்கை ஆங்கிலப்பத்திரிகைகள் ஆசிரிய தலையங்கங்களும் வெளியிட்டுள்ளன.

நேற்றைய அனைத்து மொழி பத்திரிகைகளிலும் மன்னாரில் நடைபெற்ற தாக்குதலில் 48 படையினர் பலியானது தலைப்புச்செய்தியாக வெளிவந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## நீர்வேலியிலும் குண்டு வீச்சு கண்ணாடித் தொழிற்சாலை சேதம்

நேற்றுக்காலை பகல் 10 மணியளவில் நீர்வேலிப்பகுதியில் இரு தடவைகள் பொம்மர்கள் தாக்குதலை மேற்கொண்டன. எட்டுக் குண்டுகள் வீசப்பட்டன. அவற்றில் இரண்டு வெடிக்கவில்லை.

இத்தாக்குதலால் இங்குள்ள கண்ணாடித் தொழிற்சாலையும் இரு வீடுகளும் சேதமடைந்துள்ளன. (33)

## உருத்திரபுரத்தில் குண்டுவீச்சு பெண் படுகாயம்

உருத்திரபுரத்தில் நேற்றுக் காலை இரு குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல்களை மேற்கொண்டபோது இரு வீடுகள் சேதமடைந்தன. திருமதி புஸ்பலீலா (40) என்பவர் காயமடைந்தார்.

நான்கு குண்டுகள் ஒரே இடத்தில் வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. தென்னை, வாழை மரங்களும் முறிந்தன. (ப 6, 35)

## மன்னார்தீவில் மாதம் ஒரு முறையே நிவாரண உணவு பங்கீடு

மன்னார் தீவில் ஆரம்பத்தில் வாரம் தோறும் நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது மாதம் ஒரு முறையே நிவாரணம் வழங்கப்பட்டுவருகிறது இதனால் அப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

குறிப்பாக மீன்பிடித் தொழிலை நம்பியுள்ளவர்கள் அத்தொழில் பாதிக்கப்பட்டதால் பட்டினியால் வாடுகின்றனராம். (33)

## கல்விக்கண்காட்சியில் தமிழ் மொழி புறக்கணிப்பு

கொழும்பு இராண்ட்பால் சென் யோசப் வித்தியாலயத்தில் ஒரு வாரம் இடம்பெற்ற கல்வி கண்காட்சியில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டதாக தமிழ், முஸ்லிம் அதிபர்களும் பெற்றோரும் முறையிட்டுள்ளனர்.

சுமார் 25 முஸ்லிம், தமிழ் பாடசாலைகள் பங்குபற்றிய இவ்வைபவத்தில் எல்லாமே சிங்களத்தில் நடைபெற்றன

## இலங்கை வங்கிக் கிளைகளில் போதிய ஆவணங்கள் இல்லை

யாழ் குடாநாட்டிலுள்ள இலங்கை வங்கிக்கிளைகளில் முக்கிய ஆவணங்கள் இல்லையால் இவை முழுமையாகச் செயற்படமுடியாதுள்ளன

காசோலைப் புத்தகங்கள், கணக்கு வைக்கும் பதிவேடுகள் ஏனைய முக்கிய காகிதாதிகள் என்பன கடந்த ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்ததன் பின்னர் கொழும்பிலிருந்து பெற்றுக் கொள்ள முடியாமையினால் இந்நெருக்கடியான நிலை தோன்றியிருப்பதாக வங்கிவட்டாரங்கள் தெரிவித்தன. (66)

## டிசம்பர் மாத பென்சன் வவுச்சர் அடுத்தவாரம் கிடைக்கும்

டிசம்பர் மாதத்திற்கான பென்சன் வவுச்சர்கள் அடுத்த வாரம் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் இதனை வழங்குவதற்கான காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புதிதாக ஒய்வு பெற்றவர்களுக்கான பணிக்கொடை கொடுப்பனவுகளை விரைவாகவழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் விதவைகளுக்கான கொடுப்பனவுகள் தயார் நிலையில் உள்ளதாகவும் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (66)

## அம்பாறை படகு விபத்தில் மேஜர் கஸ்ரோ வீரமரணம்

கடந்த சனியன்று அம்பாறையில் நடைபெற்ற படகு விபத்திம் அம்பாறைமாவட்ட அரசியல் பொறுப்பாளர் மேஜர் கஸ்ரோ வீரமரணமடைந்துள்ளார்.

ஆற்றை கடக்க முயல்கையில் நடந்த படகுவிபத்திலேயே மேஜர் கஸ்ரோவும் (மயில்வாகனம் பூபானந்தராசா) பொதுவில் ஜெனிஸ்ஸும் (சின்னத்தம்பி சுரேந்திரராசா) பொத்துவில் வீரமரணமடைந்தனர். (71)

## வவுனியா தெற்கிலும் ஜனசவிய நிறுத்தப்பட்டது

செங்கலடி, வவுனியா தெற்கு ஆகிய இடங்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஜனசவிய உதவி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி கிராம உதவி அரசாங்க அதிபர்களின் வேண்டுகோளையடுத்து மேற்படி —04 ஆம் பக்கம் பார்க்க

## வைத்தியப் பட்டதாரி மாணவர்க்கு பயிற்சிக் காலத்திலேயே டாக்டர் நியமனம்

பல்கலைக்கழக மருத்துவ பீடங்களில் வைத்தியப் பட்டப்படிப்பை முடிக்கின்ற வைத்தியப் பட்டதாரிகளுக்கு உடனடியாகவே வைத்திய சாலைகளில் நியமனம் வழங்கச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இப்புதிய திட்டத்தின்படி பட்டப்படிப்பை முடிக்கின்ற வைத்தியப் பட்டதாரிகளுக்கு அவர்கள் வைத்தியசாலையில் இன்ரேர்ன்சிப் உள்ளகப் பயிற்சியைப் பெறும் காலத்திலேயே அவர்களுக்கான நியமனம் வழங்கப்படும்.

## தாய்வானில் உள்ள இலங்கைத் தொழிலாளரை நாட்டைவிட்டு வெளியேறுமாறு திடீர் உத்தரவு!

தாய்வான் நாட்டில் கடமைபுரியும் இலங்கையர்களை திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இதற்கான காரணம் எதுவும் உடன் அறியப்படவில்லை.

தாய்வான் அரசின் இத்திடீர் முடிவை அடுத்து முதற்கட்டமாக ஒரு தொகுதி இளைஞர்கள் கொழும்பிற்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த முடிவை மாற்றுமாறு தாய்லாந்தில் பணிபுரியும் இலங்கையர்கள் கோரிக்கை விடுவித்தும் அது ஏற்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (ப-1)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22 - 12 - 1935

மறைவு: 02 - 03 - 1990

திதி: 20 - 02 - 1991

### அமரர் திரு. வை. இரத்தினம்

(கட்டடப் பொறியலாளரும் அரசாங்க ஒப்பந்தகாரரும், இரட்டினம் கோ., உரிமையாளரும்)

அன்பெனும் மூன்றெழுத்தை
அன்பால் எமக்கு உணர்த்தினீரே!
துன்பம் என்பது தெரியாமல்
கண்போல் எம்மை வளர்த்தீரே!
நேர்மை கண்ணியம் உண்மைக்கு
இலக்கணமாய் வாழ்ந்தீரே!
தம்பி தம்பி என்று எம்மை
தழுவி மகிழ்ந்து அழைப்பீரே!
அறிவுரையால் எம்மை வழிநடத்தி
ஆற்றல் பலவும் தந்தீரே!
எமது குடும்ப ஒளிவிளக்காய்
என்றும் எம்முன் திகழ்ந்தீரே!
இன்று எம்மையெல்லாம் விட்டுவிட்டு
எட்டா உயரம் சென்றீரே!
பற்பல ஆண்டுகள் சென்றிடினும்
என்றும் எம் இதயத்தில் வாழ்வீரே.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

02103

## நந்திக்கு சாகித்தியப்பரிசு

யாழ் பல்கலைக்கழக மருத்துவத்துறை முன்னைநாள் பீடாதிபதி பேராசிரியர் எஸ். சிவஞானசுந்தரத்திற்கு(நந்தி) தேசிய தமிழ் சாகித்தியப் பரிசு கிடைத்துள்ளது.

இவர் எழுதிய 'நம்பிக்கை' என்ற நாவலுக்காகவே இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் மார்ச் மாதம் கண்டியில் நடைபெறவுள்ள தேசிய தமிழ்சாகித்திய விழாவில் இதற்கான பரிசு நந்திக்கு வழங்கப்படவுள்ளது.

### இன்று கருத்தரங்கு

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இன்று பிற்பகல் 3 மணிக்கு'வலைகுடாப் பிரச்சினை' என்ற தலைப்பிலான தொடர் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது. (ப.12)

## 'அநீதியான தலையீட்டை நாவற்குழி மக்கள் அனுமதிக்க மட்டார்கள்'

'எமது பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைக் காரணங்காட்டி எமது இராமத்துச் சிறார்களையும் பாடசாலையின் வளர்ச்சியையும் பாதிக்கக் கூடிய பணிப்புரைகளை வழங்க கல்வித்திணைக்கள அதிகாரிகள் சிலர் முயல்கின்றனர்.'

மேற்கண்டவாறு நாவற்குழி மகா வித்தியாலயத்தில் 4 வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி கோப்பாய் கொத்தணி அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச்செல்லும் திரு. முத்துக்குமாரசாமி அவர்கட்கு அளிக்கப்பட்ட சேவைநலம் பாராட்டுவிழாவில் பிரதம உரையாற்றிய திரு. சுப்பையா அவர்கள் கவலை தெரிவித்தார்.

''ஆயினும்இம்முயற்சியினை எமது கிராமமக்கள் இறுதிவரை அனுமதிக்கமாட்டார்கள்'' என்றும் அவர் தனது உரையில் நம்பிக்கை தெரிவித்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இவ்விழாவில் திருவாளர் இராசநாயகம், ஆ நடராஜா, பண்டிதர் சு. வேலுப்பிள்ளை, க. கனகலிங்கம் முதலானோரும் பாராட்டுரை வழங்கினர்.

### சாரணர்கள் சிரமதானம்

கைதடி செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் நவீலட் பாடசாலையில் பளை மகா வித்தியாலய சாரணர் குழு சிரமதானப்பணியை மேற்கொண்டது. இச் சிரமதானம் பணி உதவி சாரணஆசிரியர் சி.விக்னேஸ்வரன் தலைமையில் நான்கு அணிகளாகப் பிரிந்து இடம்பெற்றது.

## 5-வது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 - 04 - 1942

உதிர்வு 14 - 02 - 1986

5ஆவது திதி 20 - 02 - 1991

### திருமதி சாம்பசிவம் சற்குணவதி

எனதருமை அக்காவே நீங்கள் இவ்வுலகை விட்டுச் சென்று ஆண்டுகள் ஐந்து கடந்தாலும் நீங்கள் கட்டிய மனக்கோட்டை எல்லாம் கனவாய்க் கலைந்தாலும் என்றும் எம் நெஞ்சில் உங்கள் நினைவுகள் மாறாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

தம்பி, தாய், கணவன், பிள்ளைகள்,
சரவணைமேற்கு, மாமா, மைத்துனன், மைத்துனிமார்,
வேலணை. மருமக்கள், அன்பு அண்ணன்

02104

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

துரிதமான சிக்கன சலவைக்கு மில்க்வைற் திரவ சவர்க்காரம் Liquid Soap, விளக்கெரிக்க வேப்பெண்ணை தாவடிச் சந்தி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்திலும் விற்பனையாகிறது. 02106

### விற்பனைக்கு

ஆனந்தா கலண்டர் 1991 ஆங்கில தமிழ் திகதிகள், அமாவாசை, பூரணை, அட்டமி, நவமி, ஏகாதசி, சதுர்த்தி, சஷ்டி, பிரதோஷம், கார்த்திகை, மற்றும் அரசாங்க வங்கி விடுமுறை விபரங்கள் அடங்கியது. விலை 22/- விற்பனையாளருக்கு கழிவுண்டு. ஆனந்தா புத்தகசாலை, 226, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் 02108

# வடக்கு, கிழக்கின் சகல பயிலுநர் ஆசிரியர்களுக்கும்
# மார்ச்-10 இல் கொழும்பில் கல்விக் கருத்தரங்கு!

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கடமை புரியும் சகல பயிலுநர் ஆசிரியர்களுக்குமான கல்விக் கருத்தரங்கு கொழும்பில் நடாத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 10 ஆம் திகதி காலை எட்டு மணிக்குக் கொழும்பு கெத்தாராம விளையாட்டு அரங்கில் இந்தக் கல்விக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளதாக வட - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்

தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலையில் குறிப்பிட்ட தினத்தில் கொழும்பில் பயிற்சிக் கருத்தரங்கிற்கு எவ்வாறு சமுகமளிப்பதெனப் புரியாது இப்பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பயிலுநர் ஆசிரியர்கள் கலக்கமுற்றுள்ளதாக ஆசிரிய வட்டாரங்கள் தெரிவித்தன.

## லோகசபை பட்ஜட் ஒத்திவைப்பு!

இம்மாதம் 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு செலவுத்திட்டத்தை இந்தியப் பிரதமர் சந்திரசேகர் மூன்று மாதங்களுக்கு ஒத்திவைத்துள்ளார்.

சிறு—பெரும்பான்மைப் பலத்தைக்கொண்ட தனது அரசைக் காப்பாற்றும் முகமாகவே பிரதமர் சந்திரசேகர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளாரெனக் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்,

## 'ஒழுக்கமற்ற, குண்டுவீசும் செயலை ஆண்டவனின் பெயரால் உடன் நிறுத்துங்கள்'

'துர்க்குணமிக்க ஒழுக்கமற்ற குண்டு வீசும் செயலை ஆண்டவன் பெயரால் உடனே நிறுத்துங்கள்.'

இவ்வாறு ஜனாதிபதியிடமும் அவரது பாரியாரிடமும் ஆலய வழிபாட்டுக்கிடையே பக்தர் ஒருவர் உரத்த குரலில் கோரிக்கை விடுத்தார்.

இச்சம்பவம் ஸ்ரீலங்காவில் அல்ல, அதன் தோழமை நாடான அமெரிக்காவில் நிகழ்ந்துள்ளது.

ஜனாதிபதி புஷ்ஷும் அவரது பாரியாரும் ஞாயிறு வழிபாட்டில் கலந்து கொண்டிருந்தபோதே அவர்களை நோக்கி அதே வழிபாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க பிரஜையான பக்தர் ஒருவர் உரத்த குரலில் சத்தமிட்டார்.

பக்தரின் இச்செயல் ஜனாதிபதி தம்பதியினரை அதிர்ச்சியடையச் செய்ததுடன் பக்தர்களிடையேயும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.

## ராக்கிங் செய்தவர்கள் மகர சிறையில்

தென்பகுதி பல்கலைக் கழகங்களில் புதிய மாணவர்களைக்கடுமையான முறையில் ராக்கிங் செய்த நான்கு சிரேஷ்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நால்வரும் தற்போது மகர சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## தென்னை நாற்று விற்பனை

அம்பன் கமநல சேவை நிலையத்தில் தென்னங்கன்றுகள் விற்பனைசெய்யப்படுகின்றன.

ஒவ்வொரு தென்னங் கன்றும் ரூபா 12.50 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டுவருகின்றது. (43)

## வாயால் இவர்களுக்கு வந்தது வினை! வண்டியோட்டுகிறார்கள் வாலிபர்கள்!!

'பல்லுக்கு ஏறுவதும் வாயால், பல்லுடைபடுவதும் வாயால் என்று கூறப்படுவதுண்டு. இந்தவகையில் இரு வாலிபர்கள் தம்வாயால் வந்த வினையாக இப்போது வண்டியோட்டுகிறார்கள்.

தென்மராட்சி மேற்குபகுதி கிராமம் ஒன்றைச்சேர்ந்த இவ் வாலிபர்கள் யுவதிகளை கேலி செய்த புகாரின்மீது கைது செய்யப்பட்டுத் தண்டனையாக அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வண்டி யோட்டப் பணிக்கப்பட்டுள்ளனர்.

## சதாமின் கடைசி ஆயுதம்?

இன்று 'சதாம்' என்னும் பெயர் மிகப் பிரபலமாகிவிட்டது சதாம் ஒரு ஹீரோ ஆகிவிட்டார். அந்தக் கைங்கரியத்தை அமெரிக்கா செய்திருக்கிறது. இஸ்லாமிய நாடுகளிற் பிறக்கும் குழந்தைகளுக்குச் 'சதாம்' என்ற பெயரே இப்போது சூட்டப்படுகிறது சதாம் மிகுந்த துணிச்சற்காரர். அசட்டுத் துணிச்சற்காரர், அவரிடம் தீவிரவாதக் கும்பல் இருக்கிறது. அவர் ஆணையிட்டால் எவரையும் கொலைசெய்யத் தயங்காது. ''ஈராக் தாக்கப்பட்டால் உலகம் பயங்கர விளைவுகளைச் சந்திக்கும்''என அவர் எச்சரித்திருந்தார். அவருடைய தீவிரவாதக் கும்பலில் அபு நிடால், அபு அப்பாஸ் என்ற இருவர் மிகப் பயங்கரமானவர்கள். இவர்கள் இருவரும் நடத்திய கொலைகள், குண்டு வீச்சுக்கள் அநேகம். ''சதாம் ஆணையிட்டால் கனவிலும் நினைத்துப்பார்க்க முடியாத இடங்களில் எல்லாம் குண்டு வெடிக்கும்''எனச் சதாமின் இரகசியப் பொலிஸ் படையான''முகாபரத்''தைச் சார்ந்த ஒருவர் எச்சரித்துள்ளார்.

சதாமிடம் இருக்கும் கடைசி ஆயுதம் தீவிரவாதம். யுத்த முனையில் நிலைமை பாதகமாக மாறின்,உலகம் முழுவதும் பரந்துள்ள அவரது தீவிரவாதக் குழு தன் வேலையைத் தொடங்கும்!

## மன்னார் மாவட்ட உற்பத்திக் குழுக்கள்

காலபோக நெல் அறுவடை முடிவடைந்ததும் பட்டினிச் சாவை நீக்குமுகமகா உற்பத்தியினை மேற்கொள்ளும் பொருட்டு மன்னார் மாவட்டத்தில் கிராமம் தோறும் விவசாயக் குழுக்களை அமைத்து விவசாயிகளை உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தும் பொருட்டு இதனோடு தொடர்புடைய உத்தியோகஸ்தர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் இம் மாவட்டத்தின் சகல கிராமங்களிலும் இம் மாதத்திற்குள் விவசாய உற்பத்திக்குழுக்கள் அமைக்கும் வேலை பூர்த்தியடைவதுடன் இதற்கான செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-35)

## பொதுசன மாதாந்த உதவிபெறுவோரின் விபரங்களைப் பகிரங்கப்படுத்தப் பணிப்பு!

நாடு பூராவும் தாபரிப்புப் பணம்-பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோரை இனங்கண்டு கொள்வதற்கும், இதன்மூலம் இவர்களுக்குக் கிராமிய மட்டத்தில் தேவையான உபகரணங்களைச் செய்வதற்கும், பொதுவான இடர்களுக்குக்குரிய உதவிகளைப் பெறத் தகுதியற்றவர்களைப் பட்டியலில் இருந்து நீக்குவதற்கும், பொருத்தமானவர்களை உள்ளடக்குவது பற்றிய மேல் நடவடிக்கைக்குமாக இவ்வுதவிப் பணத்தைப் பெறுவோரின் பெயர்ப்பட்டியல்களைக் கிராமங்கள் தோறும் பிரபல்யப்படுத்த வேண்டுமென புனருத்தாபன புனர் நிர்மாண, சமூக நல, இராஜாங்க அமைச்சு பணித்துள்ளது.

கிராமசேவை உத்தியோகத்தர் மட்டத்திலுள்ள சகல கிராமங்களுக்கும், அவ்வூர்களில் தாபரிப்புப்பணம் பெறுவோரின் பெயர்ப்பட்டியல்களைப் பிரபல்யப் படுத்தி அவ்வாறு வெளிப்படுத்திய திகதியுடனான பட்டியல்களின் பிரதிகளைத் தனக்கு அனுப்பி வைக்கும்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேசச் செயலாளர்களுக்குச் சமூக சேவைப்பணிப்பாளரால் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (47)

## நிலவாயுவில் இயங்கும் வாகனங்கள் தமிழக வீதிக்கு விரைவில் வருகின்றன

தமிழகத்தில் நிலவாயுவில் இயங்கும் வாகனங்கள் பாவனைக்கு வரவுள்ளன.

சென்னை எண்ணெய்சுத்திகரிப்பு நிலையம் சில பொறியியல் நிறுவனங்களின் உதவியுடன் டீசலில் இயங்கும் வாகனங்களை நிலவாயுவில் இயக்கக்கூடிய வகையில் மாற்றுவதற்குரிய முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த முறைப்படி மாதிரி அமைப்பொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. காவிரி பகுதியில் பெருமளவு கிடைக்கும் நிலவாயுவைக்கொண்டு இந்த வாகனங்கள் இயக்கப்படவுள்ளன.

## பருத்தித்துறை இறங்குதுறை அமைப்பு முதற்கட்ட வேலைகள் பூர்த்தியாகின

பருத்தித்துறை துறைமுகத்தின் இறங்குதுறை அமைப்பதற்கான முதற்கட்ட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இத்துறையை மேலும் 60 அடி தூரம்வரை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வேலைகள் பூர்த்தியடைந்ததும் ஒரே சமயத்தில் மூன்று இழுவைப் படகுகளைத் துறைக்குக் கொண்டு வருவதுடன். நான்கு லொறிகள் மூலம்பொருள்களை ஏற்றவும் வசதியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

## எண்ணெய் வளம் மிக்கசவுதியும்போரினால் இப்போது பிறரிடம் கையேந்துகிறது!

எண்ணெய் உற்பத்தியின் மூலம் உலகின் செல்வந்த நாடாக விளங்கிய சவுதி அரேபியாவும் தற்போது கடன் வாங்கும் நிலைக்கு வந்து விட்டது

சவுதி அரேபியா ஒன்பது வெளி நாட்டு வங்கிகளிடமிருந்து சுமார் 350 கோடி டாலரைக் கடனாகப் பெற முயற்சி எடுத்து வருகின்றது.

வளைகுடா யுத்தம் காரணமாகவே சவுதி இந்த நிலைக்கு வந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## இல. தேயிலையை ஏற்க எகிப்து மறுப்பு!

## கோள்கலன்கள்கொழும்புதிரும்புகின்றன!!

இலங்கையிலிருந்து அனுப்பப்பட்ட நாற்பது கொள்கலன் தேயிலையை ஏற்றுக் கொள்ள எகிப்து மறுத்து விட்டது.

கொழும்பிலிருந்து அலக்ஸாந்திரியா துறைமுகத்திற்கு அனுப்பப்பட்ட இத்தேயிலைப் பொதிகள் தற்பொழுது மீண்டும் கொழும்பிற்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றன.

குறிப்பிட்ட தேயிலையில் மிகக் கூடுதலான அளவு இரும்புச்சத்து உள்ளதாக எகிப்திய சுகாதார அமைச்சு அதிகாரிகள் பரிசோதனை மூலம் கண்டுபிடித்ததன் எதிரொலியாகவே இந்த நடவடிக்கையெடுக்கப் பட்டுள்ளது.

# சோவியத்தின் யோசனைகள் அமெரிக்கா, பிரிட்டன், ஈரான் ஆராய்வு

சோவியத் தலைவர்களுடன் பேச்சு நடாத்திய ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸிஸ் சோவியத்தின் சில முடிவுகளுடன் நேற்று ஈரான் வந்து சேர்ந்தார். ஈரானின் ஜனாதிபதி ரவ்ஸன்சானியிடம் சோவியத் சமர்ப்பித்த ஆலோசனைகள் குறித்து அஸிஸ் பேச்சு நடாத்தினார். தற்போது பக்தாத் சென்றுள்ள அஸிஸ் ஜனாதிபதி சதாம் ஹுசைனுடன் சோவியத்தின் ஆலோசனை குறித்து ஆராய்ந்து வருகிறார். இது தொடர்பான ஈராக்கின் முடிவு விரைவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சோவியத் யோசனைகள்

சோவியத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகள் ஏதும் வெளியிடப்படாது மர்மமாகவே வைக்கப்பட்டுள்ளன. எனினும் மொஸ்கோ அதிகாரிகளின் தகவலின்படி மேற்படி யோசனையில், ஈராக் குவைத்தை விட்டு நிபந்தனையில்லாது வெளியேற வேண்டும், இதன் பின்னர் ஈராக்கின் பாதுகாப்புக்கு ரஷ்யா உத்தரவாதமளிக்கும், மேற்காசிய பிரச்சனைகள் தொடர்பான ஈராக்கின் கோரிக்கைப்படி அனைத்துலக மாநாடு நடைபெறும், ஜனாதிபதி சதாம் ஓர் போர்க் குற்றவாளி என்ற மேற்குலகின் பதம் நீக்க ரஷ்யா உறுதி வழங்கும் போன்ற அம்சங்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## சோவியத் யோசனை நிராகரிப்பு

பிந்திய செய்திகளின் படி சோவியத்தின் புதிய சமரச திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி புஷ் நிராகரித்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அமெரிக்கா எதிர்பார்த்ததை பூர்த்தி செய்யவில்லை என புஷ் குறிப்பிட்டார் இதனால் தரைப்போர் மூளும் நிலை ஏற்பட்டுவிட்டது.


செஞ்சிலுவைச் சங்கம் - யாழ்ப்பாணம்

சங்க உறுப்பினர்களுக்கான

### அறிவித்தல்

1. மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 1991-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ந் திகதி நடைபெறவுள்ளது.

2. 1991/92-ம் ஆண்டுக்கான சங்க அலுவலர், செயற்குழு உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட விரும்பும் உறுப்பினர்கள் சங்கத்தினால் வழங்கப்படும் வேட்பு மனுப் படிவத்தில் தங்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். வேட்பு மனுக்கள் 1991-ம் ஆண்டு மார்ச் மாதம் 11-ம் திகதி முதல் 18-ம் திகதி வரை காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை சங்க அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். படிவம் ஒன்றுக்கு ரூபா. 5 செலுத்தி வேட்புமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்

   வேட்புமனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகள் 1991-03-18ம் திகதி பிற்பகல் 1 மணி தொடக்கம் 2 மணி வரை ஏற்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

3. பொதுக்கூட்டத்தில் முன்மொழியப்பட இருக்கும் பிரேரணை பற்றிய அறிவித்தல் 1991-03-10-ம் திகதிக்கு முன் கிடைக்கவேண்டும்.

4. நடப்பாண்டிற்கான தங்கள் சந்தாப்பணத்தை இதுவரையும் செலுத்தாத உறுப்பினர்கள் 1991-03-10-ம் திகதிக்கு முன்பதாக செலுத்தி தங்கள் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கௌரவ செயலாளர்.
செஞ்சிலுவைச் சங்கம்
யாழ் பிரிவு.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

02113


# வடக்கு கிழக்கு பகுதி கச்சேரிகளில் போதிய ஊழியர்கள் இன்றி வேலைகள் ஸ்தம்பிதம்

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள கச்சேரிகள், ஊழியர்கள், உத்தியோகஸ்தர்கள் பற்றாக் குறையினால் இயங்க முடியாத நிலையில் உள்ளன.

அதிகளவில் ஊழியர்கள் சுயவிருப்பில் இளைப்பாறியுள்ளமையால் சில அத்தியாவசிய வேலைகளைக்கூட செய்ய முடியாதிருப்பதாக கொழும்புக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

யாழ் செயலகத்திலும் இக்காரணங்களினால் சில அத்தியாவசிய பிரிவுகள் மட்டுமே இயங்கக் கூடியதாகவுள்ளது.

இதனால் ஒப்பந்த அடிப்படையில் இளைப்பாறியவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்துவதுபற்றி உயர்மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. (66)

கூட்டுறவு...
செய்யப்படுகின்றன.

போக்குவரவுச் செலவும் ஒரே மாதிரி இருப்பதால் வர்த்தகர்கள் ஏன் பொருள்களில் இவ்வாறு கொள்ளை இலாபத்தை அடைய வேண்டுமென பொதுமக்கள் வட்டாரங்கள் அதிருப்தி தெரிவிக்கின்றன. (66)

புலம்பியபடி...
திகள் தெரிவித்தன, இவர் தமது காணாமல்போன பிள்ளைகளின் படங்களை தாங்கி சென்றனர். பெண்கள் சிலர் மயக்கமடைந்து வீழ்ந்ததை காணமுடிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்வலத்தில் எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா உட்பட பல எதிர்க்கட்சித் தலைவர்கள் வெளிநாட்டு மனித உரிமை இயக்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்

ஊர்வல முடிவில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. இதில் உரையாற்றிய அன்னையர் முன்னணியின் அமைப்பாளரான டாக்டர் திருமதி மனோராணி சரவணமுத்து தமது போராட்டத்திற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவைப்பெற்றது முன்னணியின் பாதுகாப்பு கருதியே எனச் சுட்டிக்காட்டினார்,

இந்த தாய்மார்கள் தமது துன்பங்களை ஒருவரை ஒருவர் தேற்றிக்கொள்வதன் மூலம் குறைத்துவிடலாம் என நம்புகின்றனர். இவர்கள் அரசிடம் எதையுமே கேட்கவில்லை தமது பிள்ளைகள் எங்கே உள்ளனர். இறந்துவிட்டால் அதை அறிவித்தால் அவர்களுக்காக சுயமரியாதையாக நாம் கண்ணீர் விடுவோம் எனவும் திருமதி சரவணமுத்து குறிப்பிட்டார்.

அரசு வானொலி மூலம் விடுத்த எச்சரிக்கையினாலேயே இன்னும் பல தாய்மார்கள் இன்று கலந்து கொள்ளாமல் விட்டனர் என அமைப்பாளர்கள் தெரிவித்ததாக பி.பி.ஸி. குறிப்பிட்டது.

வவுனியா...
உதவி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. 35

## லொறிகள் வருகின்றன

வவுனியாவில் லொறிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதையடுத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்க லொறிகள் உட்பட பல லொறிகள் யாழ்ப்பாணம் வருவதாக வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (33, ப 35)


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ் பிரிவு

பாதிக்கப்பட்டவர்களுக்கான

### இலவச பயிற்சி

எமது சங்கத்தால் 25. 02. 91-ல் ஆரம்பிக்கப்படவிருக்கும் தமிழ் / ஆங்கில தட்டெழுத்து / சுருக்கெழுத்து பயிற்சியில் பங்கு கொள்ள விரும்பும் பின்வரும் நிலையில் உள்ளவர்கள் தகுந்த ஆவணங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும்.

1. யுத்த நிலை காரணமாக குடும்பத் தலைவனை இழந்த குடும்பத்தின் அங்கத்தினர்.

2. ஜெய்பூர் செயற்கைக்கால் பொருத்தப்பட்டவர்கள்.

தகைமை:- ஜி. ஸி. ஈ. (ஒ எல்) தமிழ் / ஆங்கிலம் (விசேட சித்தியுடன்)

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தலைவர்.

02114



### 39 ஆம் நாள் நினைவஞ்சலி

முருகுப்பிள்ளை தர்மதாசன்
(சுழிபுரம் கிராமசேவையாளர்)

அன்னை மடியில் 05.04.1938
ஆண்டவன் அடியில் 13.01.1991

சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்த திரு. முருகுப்பிள்ளை தர்மதாசன் (முன்னாள் கிராம சேவையாளர்) அவர்களின் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

கலைநகர்,
சித்தன்கேணி.

குடும்பத்தினர்

02112


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி, 'லக்ஷ்மிபில்டிங்ஸ்' உள்ள அச்சகத்தில் 20-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.